செ.வெ.எண்: 192 நாள்: 28.03.2025

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்திலுள்ள நீச்சல்குளம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும், நீச்சல் வீரர்களின் தினசரி பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நீச்சல்குளத்தில் நீந்த கற்றுக்கொள் திட்டத்தின்கீழ் (Learn to Swim Course) 2025-ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்டுள்ளபடி பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது. இந்தப் பயிற்சி முகாம் 12 நாட்களுக்கு தொடர்ந்து நடத்தப்படும்.

பயிற்சி கட்டணம் ரூ.1500/- & (GST 18%) பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ள நாட்கள் முதல் பேட்ஜ் 01.04.2025 முதல் 13.04.2025 முடிய, இரண்டாவது பேட்ஜ் 15.04.2025 முதல் 27.04.2025 முடிய, மூன்றாவது பேட்ஜ் 29.04.2025 முதல் 11.05.2025 முடிய , நான்காவது பேட்ஜ் 13.05.2025 முதல் 25.05.2025 முடிய, ஐந்தாவது பேட்ஜ் 27.05.2025 முதல் 08.06.2025 முடிய நடைபெறவுள்ளது. பயிற்சி நேரம் காலை நேரங்களில் 7.00 மணி முதல் 8.00 மணி வரை மற்றும் 8.00 மணி முதல் 9.00 மணி வரை, மாலை நேரங்களில் 5.00 மணி முதல் 6.00 மணி வரை மற்றும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை. பயிற்சி முகாமில் கலந்து கொண்டு நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்காணும் நீச்சல் பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரினை, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்க நீச்சல்குள வளாகம், புதுக்கோட்டை. தொலைபேசி எண். 04322-222187, அலைபேசி எண்.7401703498, நீச்சல் பயிற்றுநர்: 9943713554 என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai